சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!



# ஆதித்தமிழர் பேரவை

# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு





நாள் : 11.05.2

## பத்திரிக்கை செய்தி

சேரல் : செய்தி ஆசிரியர் அவர்கள்,

.............................. நாளிதழ் / தொலைக்காட்சி.

செய்தி ஆசிரியருக்கு,

ஆதித்தமிழர் பேரவையின் வணக்கங்கள், கீழ்க்கண்ட செய்தியினை தங்களது நாளிதழில் வெளியிட்டுதவுமாறு / தங்களது தொலைக்காட்சியில் ஒளிபரப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்..

**<u>சாதிவாரிக்கணக்கெடுப்பின் போது ஆதிதிராவிடர் என்று குறிப்பிடாமல் அருந்ததியர் என்றே பதிய வேண்டுமென அருந்ததியர் மக்களுக்கு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் வேண்டுகோள்.</u>**

சமூகநீதி ஆர்வலர்களின் பல ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவாக தமிழகத்தில், சமூக பொருளாதார மற்றும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறுகிறது.

ஒவ்வொரு சாதியினரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை, வாழ்வியல் சூழல், ஆகியவைகளை தெரிந்து கொண்டு அதற்கேற்ப மக்கள்.

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com

நலத்திட்டங்களையும், சமூகநீதிச் சட்டங்களையும் உருவாக்கவே இந்த சாதிவாரி கணக்கெடுப்பு.

ஆனால் இந்தசாதிவாரிக் கணக்கெடுப்பு நடக்கையில் அதிகாரிகளும் பொதுமக்களும் பொத்தாம் பொதுவாக விபரங்களை பதிவுசெய்ய வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களை எஸ்.சி என்றோ, ஆதிதிராவிடர் என்றோ குறிப்பிட வாய்ப்பு இருக்கிறது. அதுபோலவே உட்பிரிவுகளை (பகடை, மாதாரி, செம்மான், மாதிகா, சக்கிலியர்) குறிப்பிடுவதும் அருந்ததியர் மக்களுக்கும் பயன்படாது. ஆதித்தமிழர் பேரவை கால் நூற்றாண்டு காலம் போராடிப் பெற்ற உள் இட ஒதுக்கீடு எதிர்கால தலைமுறைக்கு முழு அளவில் பாதுகாப்பாக சென்று சேர்ந்திட, அருந்திதியர் மக்கள் பொத்தாம் பொதுவாக ஆதிதிராவிடர் என்று குறிப்பிட வேண்டாம் எனவும், உட்சாதிகளை கூர்மைப் படுத்திட வேண்டாம் எனவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2. தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட ஒப்பில்லா மாமன்னர் ஒண்டிவீரன் பகடை மணிமண்டபப் பணிகள் சுணக்கமாக நடைபெற்று வருவது அரைகோடி ஆதித்தமிழர்களின் உள்ளங்களில் சொல்லணா வேதனையை ஏற்படுத்தி இருக்கிறது. ஒப்பில்லா மாமன்னர் ஒண்டிவீரன் பகடைக்கு பின்னர் அறிவிக்கப்பட்ட மணிமண்டபப் பணிகளை தமிழக அரசு முடுக்கி விட வேண்டுமெனவும் மணிமண்டபத்தில் குதிரையில் அமர்ந்தபடி இருக்கிற மாமன்னர் ஒண்டிவீரன் பகடையின் முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்க வேண்டுமெனவும் தமிழக அரசை ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப்பணியில்

[signature] 11-5-2012

(இரா.அதியமான்)

நிறுவனர்.